# IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF SULUR
## (DEPOSITION OF WITNESS

**வா.சா.1-)**

**அசல் வழக்கு எண். 1075/2017**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.செல்வராஜ் | தாலூக்கா | சூலூர் |
| தந்தை பெயர் | சொக்கலிங்கம் | கிராமம் | சூலூர் |
| பணி | உதவியாளர் | மதம் | |
| வயது | | | |

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 16.02.2026 is accordance with the provision of Act X of 3331

**முதல் விசாரணை**

**1.** நான் சூலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். சார் பதிவாளருக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. சார் பதிவாளருக்காக நான் சாட்சியம் அளிக்க எனக்கு அனுமதி கடிதம் வழங்கியுள்ளார்., **14.02.2026 தேதியிட்ட சூலூர் சார் பதிவாளர் வழங்கிய அனுமதி கடிதம் சா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையின் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். 28.05.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.880/1979 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். **28.05.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.880/1979 கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பொதுவாக, ஆவணத்தை பதிவு செய்யும்போது யார் தாக்கல் செய்கிறாரோ அவர் தான் ஆவணத்தில் தாக்கல் செய்தவர் என்ற இடத்திலும், வாங்குபவராக இருந்தால் வாங்குபவர் இடத்திலும், விற்பவராக இருந்தால் விற்பவர் இடத்திலும் கையொப்பம் இடுவார்கள் என்றால் சரிதான். 28.05.1979 தேதியில் கிரய ஆவண எண்.880/1979 ஆவணம் (வா.சா.ஆ.3) எங்களது அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் வாங்குபவர் யார் என்றால் முத்துசாமி த/பெ.வீராச்சாமி என்பவர் வாங்குபவர் ஆவார். அலுவலகத்தில்

தாக்கல் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி கையொப்பம் செய்துள்ளார். அதில் முத்துசாமி என்று மட்டும் தான் உள்ளது.

3. 27.06.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.1085/1979 ஆவணத்தை தாக்கல் செய்கிறேன். **27.06.1979 தேதியிட்ட கிரய ஆவண எண்.1085/1979 கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரயம் வீராச்சாமி மகன் முத்துசாமி தான் கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை அலுவலகத்தில் தாக்கல் செய்தவர் முத்துசாமி ஆவார். அதில் முத்துசாமி என்று மட்டும் கையொப்பம் செய்துள்ளார்.இன்ஷியல் எதுவும் குறிப்பிடவில்லை.

4. 21.05.1992 தேதியிட்ட கிரய ஆவண எண்.1732/1992 எண் கொண்ட கிரய பத்திரம் தாக்கல் செய்கிறேன். **21.05.1992 தேதியிட்ட கிரய ஆவண எண்.1732/1992 எண் கொண்ட கிரய பத்திரம் சா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணம் வாதி தரப்பில் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை புஷ்பா கிரயம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தை விற்றவர் முத்துசாமி என குறிப்பிடப்பட்டுள்ளது. முத்துசாமியின் தகப்பனார் பெயர் வீராச்சாமி ஆவார். மேற்படி ஆவணத்தை தாக்கல் செய்தவர் முத்துசாமி ஆவார். அதில் தாக்கல் செய்தவர் என்ற இடத்தில் முத்துசாமி என்று மட்டும் கையொப்பம் செய்துள்ளார்.

<u>வாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

1. நான் 16 ஆண்டுகளாக பத்திர பதிவுத் துறையில் பணியாற்றி வருகிறேன். 1979 ஆண்டு முதல் பத்திர பதிவு அலுவலக நடைமுறை குறித்து தெரியும் என்றால் பதிவேடுகளின் அடிப்படையில் தெரியும். 1979, 1992 காலகட்டத்தில், ஒரு நபர் சொத்தை விற்கும்போது அவரிடம் இருந்து அடையாள அட்டையோ, இவர் தான் அந்த நபர் என அடையாளம் காட்ட ஆவணம் எதுவும் வாங்கப்பட மாட்டாது என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் கிரயம் கொடுக்கும்போது, கிரயம் செய்யும் நபர் இவர்தான் என்று சார் பதிவாளர் சரிபார்க்க மாட்டார் என்றும், இரண்டு சாட்சிகள் காண்பிக்கும் நபர் தான் கிரயம் கொடுக்கும் நபர் என ஏற்றுக்கொள்ளப்படும் என்றால் சரிதான்.

2. சா.சா.ஆ.4 கிரய ஆவணத்தை, கிரயம் செய்யும்போது ஆவணத்தில் காட்டப்பட்டுள்ள நபர் தான் முத்துசாமி என்பதை சரிபார்க்கவில்லை என்றால் ஆவணத்தில் அது போன்று குறிப்பிடவில்லை. ஆவணத்தில் உள்ள இரண்டு சாட்சிகள் கிரயம் கொடுப்பவரை நன்கு தெரிந்தவராகவும், உறவினராகவும், நண்பராகவும் தான் இருப்பார்கள் என்றால் சார் பதிவாளர் அதை ஊர்ஜிதம் செய்ய முடியாது. பத்திரப்பதிவு சட்டத்தின் படி 2 சாட்சிகள் கிரயம் கொடுப்பவரை அடையாளம் காட்ட வேண்டி நிரூபிப்பவர் என கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். 1979 ம் ஆண்டில் ஒரு கிரய பத்திரத்தில், கிரயம் பெறும் நபர், கையொப்பம் இட்டுள்ளார் என்றால் அந்த நபர் பின்னிட்டு வரும் ஆவணங்களில் அவருடைய கையொப்பத்தை மாற்றம் செய்துள்ளார் என்றால் 1979 ல் செய்த கையொப்பத்தையே பின்னிட்டு வரும் ஆவணங்களில் கையொப்பம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றால் முன்பாக உள்ள ஆவணத்தை ஒப்பிட்டு பார்க்க வேண்டிய நடைமுறை அப்போது இல்லை.

3. பின்னிட்டு கையொப்பத்தை மாற்றியிருந்தால் அந்த கையொப்பத்தை பின் வரும் ஆவணங்களில் செய்யலாம் என்றால் முன்பாக நபர் எவ்வாறு கையொப்பம் செய்துள்ளார் என்றும், அவர் கையொப்பத்தை மாற்றியுள்ளரா என்பது குறித்து சார் பதிவாளர் கவனத்திற்கு வராது. கிரய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்யும் 2 நபர்கள் தான் கிரயம் கொடுப்பவரை அடையாளம் காட்டுகிறார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur